[1st November 1958

SRI K. SATTANATHA KARAYALAR : வந்திருக்கக்கூடிய புகார்களில், நிகழ்ச்சிநிரல் தமிழில்கூட கொடுக்கப்படவில்லை என்பதும் ஒன்றுகும். அந்த அடிப்படையில் வந்த பராதிகள் மீது அவர்கள் ஹைக்கோர்ட் வரை போய் தீர்ப்பு வாங்கி வந்துள்ளார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதைப்பற்றி தனிக் கேள்வி கேட்கவும். "இர்ரெகுலாரிட்டீஸ்"-ஐப் பொருத்தமட்டும் கலெக்டர் மூலமாகவும், இன்ஸ்பெக்டர் ஆப் லோக்கல் போர்ட்ஸ் மூலமாகவும் விசாரித்ததில் அவர்கள் அதைக் கோர்ட்டிற்கு கொண்டு போய் முடிவு எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று தெரியப்படுத்தினதால் கோர்ட்டிற்குப் போக அனுமதி கொடுக்கவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, inasmuch as there has been a lot of complaint against this body, will the Government appoint a special officer to make an enquiry and submit a report to the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதைப்பற்றி இப்பொழுது ஆலோசனையில்லை. ஆனல் அது கவனிக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN : இங்கு கொடுக்கப்பட்டுள்ள கேள்வியையொட்டி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, உதக மண்டல நகராட்சி மன்றத்தார்மீது எந்தவிதமான வழக்கும் நடைபெற்று ஒரு முடிவிற்கு வந்ததாக தெரியவில்லை. தமிழில்தான் அச்சிடப்பட வேண்டுமென்று உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இத் தீர்ப்பு வந்து ஏறத்தாழ இரண்டு மூன்று மாதங்களாகிறது. அது குறித்து அமைச்சர் அவர்களின் தெளிவான பதிலையே அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. தலைவரை மாற்றுவதற்கோ அல்லது அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கோ தகுந்த காரணமில்லை என்றுதான் கூறப்பட்டது.

SRI K. SATTANATHA KARAYALAR : ஒரு இலாகாவின் மீது ஒரு குற்றச்சாட்டு வந்தால் அதுபற்றி ஹைக்கோர்ட் வரை போய் தீர்ப்பு வரும் வரை காலதாமதம் செய்யாமல் சம்பந்தப்பட்ட இலாகாவே அதன் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள இனிமேலாவது ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்பொழுதும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுதான் வரப்படுகிறது. மேலும் அப்படி எடுக்கப்படும்.

Rise in the prices of foodstuffs

790-G *Q.*—SRI K. VINAYAKAM AND SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the rise in prices of foodstuffs in the City of Madras ;

(*b*) what steps the Government propose to take to control the rise in the prices of foodstuffs; and

(*c*) what are the causes for such general rise in prices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the affirmative.

1st November 1958]

(*b*) The Government are watching the price trends and are constantly revising the position. The fair prices shop organization is kept intact on a small scale to meet any emergency. At present wheat is sold at fair price in these shops.

(*c*) Increase in prices during the present lean months is usual. Further with the sharp increase in food prices in North India, there has been a sympathetic trend in Southern States also.

* 790-H *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to curb the soaring prices of food and food articles in this State ; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Increase in prices of foodgrains during the present lean months is usual. Further, recently the prices of foodgrains have gone up in North India and there has been a sympathetic trend in the prices in the Southern States also. The Government are carefully watching the situation. The fair price shop organization is kept intact on a small scale to meet any emergency.

MR. SPEAKER : It is now 10 o'clock and we have got about six more questions. We shall take five more minutes and dispose of them.

SRI K. VINAYAKAM : Sir, do the Government believe that there is reasonable possibility of bringing the prices down in the near future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would not like to give any forecast about the future. But the Government are taking all possible steps to check the rise in the price.

SRI K. ANBAZHAGAN : தஞ்சை மாவட்டத்திலும் பிற இடங்களிலும் விலைவாசிகள்மட்டும் திடீரென்று 10 நாட்களுக்குள் உயர்ந்திருக்கின்ற காரணத்தினாலும், அவர்களுக்கு வரக்கூடிய வருமானம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், பல கிராமப் பகுதிகளில் மக்கள் உணவுப் பொருள்கள்கூட வாங்க முடியாமல் திண்டாடுகிறார்கள். இப்படி திடீரென்று ஏற்பட்ட விலைவாசி உயர்வைச் சமாளிக்க அரசாங்கம் என்ன செய்யப்போகிறது ? 10-00 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திடீரென்று அதிகமாக விலை ஏறவில்லை. அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கக் கூடிய தகவல் அதுதான். இருந்தாலும் இது மாதிரி கிராமங்களில் இருப்பவர்களுக்கு அதிகக் கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்போது இருக்கும் விலையே விவசாயிகளுக்குக் கட்டுபடியாகவில்லையென்று விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது இருக்கும் விலை அதிகவிலை. அதிக விலையை கட்டுப்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். ஓர் அளவுக்கு மேல் விலை குறைந்தால், அப்போது அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கும்.